செய்தி வெளியீடு எண் : 035 நாள்: 06.01.2022

## செய்தி வெளியீடு

### "நித்தி ஆயோக் விரைவில் வெளியிடவுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு (4.0) 2021–22 மற்றும் பற்பரிமாண வறுமைக் குறியீடு: மாநில கண்ணோட்டம்" கருத்தரங்கம் (பட்டறை)

நித்தி ஆயோக் அமைப்பு விரைவில் வெளியிடவுள்ள "நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு (4.0) 2021–22 மற்றும் பற்பரிமாண வறுமைக் குறியீடு (தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பு 5) 2019–20ஐ அடிப்படையாகக் கொண்டு: மாநில கண்ணோட்டம்" என்கிற தலைப்பில் அவற்றின் முக்கிய அம்சங்கள் குறித்த மாநில அளவிலான இரண்டு நாள் கருத்தரங்கம் தமிழக அரசின் திட்டம் மற்றும் வளர்ச்சித்துறையால் சென்னையில் 2022 ஜனவரி, 4 மற்றும் 5ஆம் தேதியில் நடத்தப்பட்டது.

இந்த கருத்தரங்கமானது, நித்தி ஆயோக் வெளியிடவுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு (4.0) மற்றும் பற்பரிமாண வறுமைக் குறியீடு ஆகியவற்றில் தமிழகத்தின் முன்னேற்றமான செயல்பாட்டினை பிரதிபலிப்பதற்காக, தொடர்புடைய அனைத்துத் துறைகளின் கருத்துக்களை ஒருங்கிணைத்து பெற்று அதனை நித்தி ஆயோக் அமைப்பிற்கு அளித்திடும் நோக்கில் நடத்தப்பட்டது.

நித்தி ஆயோக் அமைப்பின் நீடித்த வளர்ச்சி இலக்கு பிரிவின் முகமை அலுவலர் திருமதி. சன்யுக்தா சமத்தார், இ.ஆ.ப., அவர்களின் தலைமையிலான அணியில் நித்தி ஆயோக் அமைப்பின் அலுவலர்கள் குழு இக்கருத்தரங்கில் பங்கேற்றனர். இந்த கருத்தரங்கின் விவாதங்களில் தொடர்புடைய அரசுத் துறைகளின் செயலாளர்கள், துறைத் தலைவர்கள், மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்கள், யூனிசெப், ஜெ–பால், பொது விவகார மையம், GIZ உள்ளிட்ட அமைப்பினர் பங்கேற்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மற்றும் இதர தொடர்புடைய அலுவலர்களும் இணையதளம் வாயிலாக இக்கருத்தரங்கில் பங்கேற்றனர்.

இக்கருத்தரங்கு தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து குத்து விளக்கு ஏற்றப்பட்டது.

திரு. தி.ச. ராஜ்சேகர், இ.ஆ.ப., உறுப்பினர் செயலர், மாநில திட்டக் குழு அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்.

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள் தனது சிறப்புரையில், தமிழகத்தில் நீடித்த வளர்ச்சி இலக்கினை எட்டுவதில் மாநில அரசின் உறுதியினையும், அதேபோல், அரசின் அனைத்து சேவைகளும் தேவைப்படும் ஒவ்வொருவருக்கும் அளிப்பதில் அரசின் அர்ப்பணிப்புத் தன்மையையும், இதன் மூலமாக, ஒருவரும் விடுபடாவண்ணம் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை எட்ட இயலும் என்ற அரசின் கருத்தினை எடுத்துரைத்தார்.

மேலும், அவர், அரசால் புதியதாக அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களான, ‘‘***மக்களைத் தேடி மருத்துவம்***’’, "***இன்னுயிர் காப்போம்***" ஆகியவற்றின் சிறப்புகளை தெரிவித்து, இதன் மூலம் நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் வரும் இலக்கு–3, மக்கள் நல்வாழ்வு, அதிலும் குறிப்பாக, தொற்றா நோய் கண்டுள்ளவர்களின் இல்லம் தேடி சென்று மருத்துவ சிகிச்சை அளிப்பதன் வாயிலாக தொற்றா நோய் கண்டுள்ளவர்கள் குணப்படுத்தப்பட்டு வருவதையும், அதேபோல், சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகள் குறைப்பது குறித்தும் எடுத்துரைத்தார். இதேபோன்று, கல்வி மற்றும் சுற்றுச்சூழல் துறைகளில் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்பட்டு வரும் ‘‘***இல்லம் தேடி கல்வி***’’, ‘‘***மீண்டும் மஞ்சப்பை***’’ ஆகிய புதிய திட்டங்களை குறித்து விவரித்தார். கொரோனா பெருந்தொற்று பாதிப்பிலிருந்து மக்களை காப்பதற்காகவும், பாதிக்கப்பட்டவர்களை மீட்டெடுப்பதற்காகவும் கொரோனா கட்டளை மையங்கள் போன்ற சிறப்பு தொழில்நுட்பம் வாய்ந்த முன்னெடுப்புகள் மாநிலத்தில் மேற்கொள்ளப்பட்டதையும் விவரித்தார். அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களை நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கண்ணோட்டத்தில் தமிழகத்தில் செயல்படுத்தப்படுவதில் ஒரு சில உதாரணங்களே இத்திட்டங்களாகும் என்று எடுத்துரைத்தார்.

மாநிலத் திட்டக்குழுவின் முழு நேர உறுப்பினர், முனைவர் இரா. சீனிவாசன் அவர்கள் தனது சிறப்புரையில், சமூக நீதியை எட்டுவதில் தமிழக அரசின் உறுதியான கொள்கை நிலைப்பாடுகள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் வாயிலாக உள்ளபடியே நீடித்த வளர்ச்சி இலக்குகளை தமிழகத்தில் எளிதில் எட்ட இயலும் என்பதை சுட்டிக்காட்டினார். மேலும், அவர் தமிழகத்தில் பல்லாண்டுகாலமாக செயல்படுத்தப்பட்டுவரும் முன்னோடி திட்டங்களான, பள்ளி சிறார்களுக்கான மதிய உணவுத் திட்டம், வறுமை ஒழிப்பிற்கான பல்வேறு திட்டங்கள், மகப்பேறு நலத் திட்டம், திருமண நிதியுதவி திட்டம், குடிசைகளில்

வசிப்பவர்களுக்கான குடியிருப்பு வழங்கும் திட்டம் ஆகியன, நீடித்த வளர்ச்சி இலக்குகளின் கீழ் வரும் இலக்குகளான வறுமை ஒழிப்பு, பட்டினியில்லா நிலை, மக்கள் நல்வாழ்வு, அனைவருக்கும் தரமான கல்வி, மகளிர் உரிமை, பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதி உள்ளிட்ட இலக்குகள் அடைவதற்கான வழிமுறைகள் உள்ளதையும் சுட்டிக்காட்டினார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் பேரில், நலிவடைந்த பிரிவினர் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில், முக்கிய துறைகளான மருத்துவம், கல்வி, தொழில், வறுமை ஒழிப்பு, வீட்டு வசதி, பாலின சம நிலை ஆகியவற்றின் முன்னேற்றத்திற்காக புதிய கொள்கை ஆவணங்கள், மாநிலத் திட்டக்குழுவால் தயாரிக்கப்பட்டு வருவதையும் தெரிவித்தார்.

துவக்க நிகழ்ச்சிகளுக்கு பிறகு நடைபெற்ற தொழில்நுட்ப அமர்வுகளில், நித்தி ஆயோக் அமைப்பின் நீடித்த வளர்ச்சி இலக்கு பிரிவின் முகமை அலுவலர் திருமதி. சன்யுக்தா சமத்தார், இ.ஆ.ப., அவர்கள், மேற்கொண்ட இலக்கு வாரியான, விளக்கப்படக் காட்சி விவாதம், 2021–22 ஆண்டிற்காக வெளியிடவுள்ள நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு (4.0)ற்கான உத்தேச குறிகாட்டிகளில் தமிழகத்தின் நிலை, முன்னேற்றம் மற்றும் முன்னேற்றம் காணப்பட வேண்டிய இனங்கள் ஆகியவை குறித்து விரிவான விவாதங்களை உள்ளடக்கியதாக இருந்தது. இதனைத் தொடர்ந்து, நித்தி ஆயோக் அமைப்பால் இலக்கு மற்றும் குறிக்காட்டி வாரியான விளக்கப்படக்காட்சி மேற்கொள்ளப்பட்டு அதன் மீது விரிவாக விவரிக்கப்பட்டது.

நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு (4.0)ற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் தொடர்பாக, மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு அரசுத் துறைகளின் அலுவலர்கள் பல்வேறு கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கினர்.

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு (4.0)ற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் தொடர்பான மாநிலத்திற்கான அம்சங்களை உணர்ந்து, அது தொடர்பாக குறிகாட்டிகளுக்கான தரவுகள், தரவுகளின் ஆதாரம் ஆகியவை குறித்தும், தொடர்புடைய துறைகள், ஒன்றிய அரசின் தொடர்புடைய அமைச்சகத்திற்கு தரவுகள் அளிக்கப்படுவதை உறுதி செய்வதன் மூலம் எதிர்வரும்

நீடித்த வளர்ச்சி இலக்குகள் இந்திய குறியீடு (4.0)ல் எந்த ஒரு இலக்கிலும் தமிழகம் பின்தங்கிய நிலையில் இல்லை என்பதை உறுதி செய்திட இயலும் என்பதால், தொடர்புடைய துறைகள் இவற்றில் சிறப்பு கவனம் செலுத்திட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

05.01.2022 அன்று பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, ஆணையர், முனைவர். எம். கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் நீடித்த வளர்ச்சி இலக்கிற்கான, மாநில மற்றும் மாவட்ட குறிகாட்டி வரையறை குறித்து விளக்கப்படக் காட்சி மூலம் எடுத்துரைத்தார்.

நித்தி ஆயோக் அமைப்பின் முகமை அலுவலர் அவர்கள் பற்பரிமாண வறுமை அளவிடுதல், வறுமை குறைப்பு, மற்றும் மாநிலத்திற்கான சீர்திருத்த செயல்திட்டத்தின் தேவை ஆகியவற்றை குறித்து விவரித்தார். இதனை தொடர்ந்து நித்தி ஆயோக் அமைப்பின் குழு அலுவலர் பற்பரிமாண வறுமை குறியீட்டின் அடிப்படை, அவற்றின் பல்வேறு காரணிகள் மற்றும் சீர்திருத்த செயல்முறை திட்டம் குறித்து விளக்கப்படக் காட்சி மூலம் எடுத்துரைத்தார்.

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள், நீடித்த வளர்ச்சி இலக்குகளின் தொடர்புடைய குறிகாட்டிகளுக்கான தரவுகளை இணைய தளக் கண்காணிப்புப் பலகையில் தரவேற்றம் மேற்கொள்ள வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தியதோடு, பற்பரிமாண வறுமை குறியீடு தொடர்பாக, மாநிலத்திற்கான துறைசார்ந்த சீர்திருத்த செயல்திட்டங்களை தொடர்புடைய துறைகள் வடிவமைக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை, ஆணையர் அவர்களின் நன்றியுரையுடன் கருத்தரங்கு நிறைவுற்றது.

-----

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**